# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கம்
## (கூட்டிணைத்தல்)

**வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கத்தைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 2016, ஓகத்து மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2016, யூலை மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *130 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கம்**
**(கூட்டிணைத்தல்)**

## வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

*''வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கம்'' என அறிமுகப்படுத்துகின்றதும் குறிப்பிடப்படுவதுமான சங்கமானது அதன் உறுப்பினர்கள் இணங்கிய சட்டதிட்டங்களுக்கு இணங்க அச்சங்கத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் பயனுள்ளதாக செயற்படுத்துவதும் செயற்படுத்திச் செல்வதும் கருமங்களுக்காக இதுகாலவரை ஏற்படுத்தப்பட்டிருந்ததாதலாலும்,*

*மேற்படி சங்கம் உருவாக்கப்பட்டதானது குறிப்பிட்ட குறிக்கோளுக்கும் விடயங்களுக்குமாகவும், அந்த குறிக்கோள்கள் மற்றும் விடயங்கள் மேற்படி சங்கத்தின்மூலம் இதுவரை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டும்,நிறைவேற்றியும் உள்ளதாலும் மேற்படி சங்கத்தை கூட்டிணைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாலும் அக்கோரிக்கையை நிறைவேற்றல் மக்கள் நலன்சார்ந்தது என்பதாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

***2**. இச்சட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி முதல் மற்றும் அதன் பின்னர் (இங்கு இதன்பின்னர் ''சங்கம்'' என குறிப்பிடப்படுகின்ற) '' வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கத்தின்'' உறுப்பினர்களாக இருக்கும்வரை நபர்களும் இதன்மூலம் நிறுவன மாக்கப்படுகின்ற நிறுவனத்தில் இதன்பின்னர் உறுப்பினர்களாக உள்வாங்கப்படுகின்ற நபர்களும் (இங்கு இதன்பின்னர் ''நிறுவனம்'' என குறிக்கப்படுகின்ற) '' வடமேல் மாகாண ஹ்ருதய நோய் நிவாரண சங்கம்'' எனும் பெயர் மற்றும் தலைப்பின்கீழ் நிலையான போக்குள்ள நிறுவனமாக இருக்கவேண்டியதுடன் அப்பெயரில்*

அந்நிறுவனத்தின் மூலமும் அதற்கெதிராகவும் அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குத்தாக்கல் செய்ய இயலும். மேலும், பொது இலச்சினை ஒன்றை வைத்துக்கொள்ளும் மற்றும் பாவிக்கும்போது, தங்கள் விருப்பின்பேரில் அதனை மாற்றுவதற்கும் முழு அதிகாரம் மற்றும் அதிகாரசபை அதற்கு உண்டு.

**நிறுவனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.**

**3**. நிறுவனம் உருவாக்கப்படுதல் கீழ்க்காணப்படும் பொது குறிக்கோளுக்காக என்பது இங்கு பிரகடனப்படுத்தப்படுகிறது :-

(அ) ஹ்ருதய நோயாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள், மருந்து வசதி மற்றும் ஏனைய தேவையான வசதிகளை வழங்குதல் ;

(ஆ) ஹ்ருதய நோயாளர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், பொருள் மற்றும் நிதி வசதிகளை வழங்குவது ;

(இ) ஹ்ருதய நோய் ஏற்படுவதை தவிர்ப்பது மற்றும் அது தொடர்பான மாநாடுகள், விரிவுரைகள் மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் ; அத்துடன்

(ஈ) மேற்படி குறிக்கோள்களை எட்டுவதற்குத் தேவையான தகுந்த அதனுடன்கூடிய அல்லது கூடுமானதாகும் ஏனைய செயல்கள், கருமங்கள் மேற்கொள்ளல்.

**நிறுவனத்தின் பொதுவான அதிகாரங்கள்.**

**4**. வங்கிக்கணக்கு ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் அதனை முடிவுறுத்தல், பிணையுடன் அல்லது பிணையின்றி கடன் எடுத்தல் அல்லது பெறல், உதவிகள் மற்றும் நன்கொடைகள் பொறுப்பேற்றல் அல்லது சேகரித்தல், சுயநிதியங்களை முதலீடுசெய்தல், நிறுவனத்தின் குறிக்கோளை ஈடுசெய்தலுக்குத் தேவையான அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை சேவையில் இணைத்தல், பணியில் ஈடுபடுத்தல் மற்றும் பணிநீக்கஞ் செய்தல் உட்பட நிறுவனத்தின் குறிக்கோள்கள் அனைத்தையும் அல்லது அவற்றில்

எதனையும் நிறைவேற்ற அல்லது செயற்படுத்தத் தேவையான அல்லது உகந்த அனைத்துச் செயல்கள், விடயங்கள் மற்றும் கருமங்கள் இந்த மசோதாவில் அல்லது வேறு ஏதேனும் எழுத்துமூல சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மேற்கொள்ளும், நிறைவேற்றும் மற்றும் செயற்படுத்தும் அதிகாரம் நிறுவனத்திற்கு உண்டு.

*நிறுவன நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல்.*

**5.** *(1)* நிறுவன நடவடிக்கைகள் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் நிறுவனத்தின் நிகழ்கால அதிகாரம்வாய்ந்த ஒழுங்குகளுக்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற அதிகாரிகள் மற்றும் அவ்வாறான மேலும் நபர்கள் தொகையைக்கொண்ட நிர்வாகக் குழுவின்மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*(2)* இராஜினாமா செய்தல், நீக்குதல் அல்லது மரணம் காரணமாக நிர்வாகக் குழுவில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்காக நிறுவனத்தின் நிகழ்கால ஒழுங்குகளுக்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

*(3)* இச்சட்டம் செயற்படுகின்ற தினத்திற்கு முன்தினம் பதவிகள் வகிக்கின்ற உறுப்பினர்களைக்கொண்டு நிறுவனத்தின் முதலாவது நிர்வாகக் குழுவும் செயற்பாட்டுக் குழுவும் அமையும்.

*நிறுவனத்தின் ஒழுங்கு விதிகள்.*

**6.** *(1)* நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அதன் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான சட்டவிதிகள் அதாவது நிறுவனத்தின் உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதற்கு, நீக்குவதற்கு அல்லது வெளியேற்றுவதற்குத் தேவையான சட்டவிதிகள், அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான சட்டவிதிகள், நிறுவன கருமங்களை மேற்கொள்ளத் தேவையான செயற்பாடுகள் அல்லது வேறு பொது சட்டதிட்டங்கள், இச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அல்லது ஏனைய எழுத்துமூல சட்டத்திற்கு முரண்படாத வகையில் நிறுவன பொது சபைக் கூட்டமொன்றின்போது வருகைதந்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு களால் அவ்வப்போது விதித்துக்கொள்ளல் சட்டரீதியானதாகும்.

(2) மேலே உப பந்தி 1 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்படும் வகையில் கூட்டமொன்றின்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயற்பட்டு நிறுவனம்மூலம் விதிக்கப்பட்டுள்ள சட்டவிதிகளை சீர்திருத்தல், மாற்றஞ்செய்தல், மேலதிகமாக சேர்க்க அல்லது இரத்துச் செய்யமுடியும்.

(3) இச்சட்டம் செயற்படும் தினத்திற்கு முன்தினம் சங்கத்தின் நடைமுறைச் சட்டவிதிகள், இச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கோ அல்லது ஏனைய எழுத்துமூல சட்டத்திற்கோ முரண்படாத வரையில், இப்பந்தியில் குறிப்பிடப்படுகின்ற சட்டவிதிகள் என்றே கருத வேண்டும்.

(4) நிறுவன உறுப்பினர்கள் நிறுவன சட்டவிதிகளுக்கு கீழ்ப் படிந்தோராவர்.

கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கக் கூடியதும் கூட்டுத்தாபனத்தால் செலுத்த வேண்டியதுமான நிதிகள்.

**7**. இச்சட்டத்தின் தேவைகளுக்கேற்ப, இச்சட்டம் செயற்படுகின்ற தினத்திற்கு முன்தினம் உள்ள சங்கத்தின் கடன் மற்றும் பொறுப்புகள் இதன்மூலம் தாபிக்கப்படுகின்ற நிறுவனத்தின்மூலம் செலுத்தப்படவேண்டியதுடன் அன்றைய தினம் சங்கத்திற்கு செலுத்தப்படவேண்டிய கடன் தொகைகளும், சந்தாப்பணம், உறுப்பினர்கள் கட்டணம், நன்கொடைகள் போன்றவையும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) நிறுவனத்திற்கு அதனது நிதியம் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதுடன், நிறுவனத்திற்கு மற்றும் நிறுவனத்திற்காக இதுவரை பொறுப்பேற்றுள்ள அல்லது இதன்பின்னர் பொறுப் பேற்கின்ற நன்கொடைகள், கணக்கிடப்பட்ட ஒழுங்கமைப்பு, பொறுப்பித்தல், பரிசுகள் அல்லது கட்டணங்கள் போன்று கிடைக்கும் நிதி, நிர்வாகக்குழு அல்லது மத்திய குழுமூலம் தீர்மானிக்கப் படுகின்ற வகையில் ஒரு வங்கியில் அல்லது பல வங்கிகளில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் சுய அதிகாரங்கள், கருமங்கள் மற்றும் கடமைகள் செயற்படுத்தப்படும்போதும் நிறைவேற்றும்போதும் கூட்டுத்தாபனத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் செலவினம் நிறுவன நிதியத்தால் செலுத்தப்பட வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசையும் அல்லது அசையாத சொத்துக்கள் கொண்டிருத்தல்.*

**9**. ஏதேனுமொரு விலைக்கு வாங்குதல், அன்பளிப்பு, பரிசு அல்லது இறுதிவிருப்பு பத்திரத்தின்மூலம் உடைமைகள் விடுவிப்பு பிரகாரம் அல்லது ஏனைய வகையில் நிறுவனத்திற்கு உரித்தாகின்ற ஏதேனும் அசையும் அல்லது அசையா சொத்துக்களை கையகப்படுத்திக்கொள்ளவும் கொண்டிருக்கவும் சட்டத்தில் நிறுவனத்திற்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான சொத்துக்கள் நிறுவனத்தில் தற்காலத்தில் நடைமுறையிலுள்ள ஒழுங்குகளுக்கமைவாக அச்சொத்துக்களை விற்றல், அடகுவைத்தல், கைமாற்றுதல், குத்தகைக்கு வழங்குதல் அல்லது ஏனையவகையில் விடுவித்தல் ஆகியனவும் முழு அதிகாரத்துடன் இச்சட்டத்தின் கருமங்களுக்காக நிறுவனம்மூலம் அச்சொத்துக்களை கொண்டிருக்க முடியும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, மத்தியக் குழுவின் செயலாளரிடம் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்வாகக் குழு தலைவர் மற்றும் மேலுமொரு குழு உறுப்பினர் முன் அல்லாது அதனை எந்தவொரு சாசனப் பத்திரத்திலும் இடக்கூடாது. தான் வந்திருப்பது குறித்த அறிகுறியாக அவர்கள்மூலம் அச்சாசனப் பத்திரத்தில் தங்களது பெயர்களை கையொப்பமிட வேண்டும் என்பதுடன் அவ்வாறு வைக்கப்படுகின்ற கையொப்பம் சாட்சியாளர் என்றவகையில் ஒரு நபரால் வைக்கப்படும் கையொப்பத்திற்கு அப்பால் இருக்க வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்*

**11**. இச்சட்டத்தில் குறிக்கப்படும் நபர்களினதும், அவர்கள்மூலமாகவும் அவர்களினதும் அவர்களின்கீழ் உரிமை பாராட்டும் நபர்களும் உரிமைகளுக்குத் தவிர குடியரசின் அல்லது மேலும் இராச்சிய சபையின் அல்லது நிறுவன சபையின் அல்லது வேறு எவரேனும் நபரினது உரிமைகளுக்கு இம்மசோதாவில் உள்ளடங்கும் எதுவும் பாதிப்போ, அழுத்தமோ ஏற்படுத்தக்கூடாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்